முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 957

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.05.2022, வெள்ளிக்கிழமை

1. அறமெனும் சக்திகொண்ட வள்ளலே
ஆறுமுக ஞானியே அரங்கனே
வரம்பெற்று என்சக்தியாக வாழும்
வள்ளலே ஞான தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 30 ம் நாள், 13.05.2022 வெள்ளிக்கிழமை)
ஆசி தந்து அருட்சுவடி வழி
அருளுவேன் அரங்கன் சக்தி மேலும் உலகம் அறிய
3. அறியவே அரங்கனே கலியின் மாதவசியாகும்
ஆற்றல்மிக்க அரங்கன் கொள்கையே கலி இடரை வெல்லும் மகா சக்தியாகும்
ஆகவே உலகோர் அரங்கன் தருகின்ற உபதேசம்
அருள்ஞான வழிகளை வரமென ஏற்று தொடர்ந்தால் போதும்
4. வையகத்தில் சடுதி மாற்றம் நிகழும்
நிகழவே கலியுகத்தை மீட்க வந்த நீதிமான் அரங்கன்
பிழையற அரங்கன் திருவடி பற்றினால் போதும்
பேருலகம் சடுதி ஞானபலம் காணும்
5. காணவே ஞான வழிகளை தொடர்ந்து
கருணைகொண்டு அரங்கன் தர்மத்தை பின்பற்றி
பின்பற்றி உலகோர் ஞானம் பயின்றால்
பிசகின்றி தர்மம் தொடர்ந்தால்
6. இன்பமான வாழ்வாக கலியுகத்தில் இவர்களெல்லாம்
ஏழாம் படை வீட்டு அரங்கன் சக்திவழி
துன்பமின்று தூய ஞான வாழ்வாக
தேசிகனார் தேடல் வழி ஞானிகளாகவும் மாற்றம் பெறுவர்
7. மாற்றம் காண அரங்கன் குடில் நோக்கி வாரீர்
மரணமில்லா பெருவாழ்வைப்பெற அரங்கன் ஞான வழி வாரீர்
வாரீர் ஓங்காரக்குடில் நோக்கி வந்துமே அரங்கன் ஞான வழி தொடர
பேருலகில் ஞானிகளாகி சிறப்பர்

புகன்றிய ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—